


பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50




சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ ஆனி மீ 23 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 13 (07-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 134

## ஒரே நாளில் 2,200 அகதிகள் இராமேஸ்வரம் அடைந்தனர்

சென்னை ஜூலை 7

கடந்த வியாழக்கிழமை மட்டும் 2 ஆயிரத்து 200 க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்தனர் என்று சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

39 படகுகள் மூலம் வந்தடைந்துள்ள சுமார் 570 குடும்பங்களைச் சேர்ந்த இந்த அகதிகள் வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் பேசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று மண்டபம் முகாம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களையும் சேர்த்து மண்டபம் அகதிகள் முகாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட்ட ஆசிரியருக்கு சம்பள முற்பணம் இல்லை

வெளிமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து, யாழ் மாவட்டம் வந்த ஆசிரியர்களுக்கு சம்பள முற்பணம் வழங்குவதற்கு ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த ஏனைய அரச ஊழியர்களுக்கு மட்டுமே செயலகத்தில் சம்பள முற்பணம் வழங்கப்படுகிறது.

இப்படி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

### மானிப்பாய் ஆஸ்பத்திரியில்

## மருந்து, ஒக்சிசனுக்கு தட்டுப்பாடு எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

மானிப்பாய் மெமோறியல் ஆஸ்பத்திரி கட்டடத்தில் இயங்கும் யாழ். வைத்திய சாலைப் பிரிவுக்குத் தேவையான மருந்துவகைகளும், ஒக்சிசன் சிலிண்டர்களும் கையிருப்புக் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒருவாரத்துக்குத் தேவையான மருந்துகளும் நான்கு ஒக்சிசன் சிலிண்டர்களுமே தற்போது கையிருப்பில் இருப்பதாகவும் அறிய வந்தது.

பெறுமதி கூடிய மருந்து வகைளுக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அவற்றைப்பெறப் பொதுமக்கள் தனியார் கடைகளையே நாடவேண்டிய நிலையும் உருவாகியிருக்கிறது. [உ-10]

## அம்பாறை காட்டில் மோதல்; படையினர் மூவர் உயிரிழப்பு

அம்பாறை காட்டுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல் சம்பவம் இடம் பெற்றது.

இந்த மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாகவும்—

ரி-81 ரக ரைபிள் ஒன்றை தாங்கள் மீட்டதாகவும்—

தங்கள் தரப்பில் கஜமோகன் என்ற போராளி உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## முல்லைத்தீவு இராணுவத்தினர் நீராவிப்பிட்டி நோக்கி ஷெல்வீச்சு

### முஸ்லிம் மக்கள் இடம்பெயர்வு

ஒட்டுசுட்டான், ஜூலை 7

முல்லைத்தீவு நகரிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் இருந்து மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது.

அனேகமாக தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி பகுதிகளை நோக்கியே ஷெல் வீச்சு இடம் பெறுகிறது.

அதனை அடுத்து நீராவிப் பிட்டியில் குடியிருந்த முன்நூறுக்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் இடம் பெயரத் தொடங்கியுள்ளன.

இம்மக்கள் கால்நடையாக பாவற்குளம் மற்றும் தென் பகுதியிலுள்ள கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். (ஒ-113)

## கிளிநொச்சி ராணுவமும் இரவு வேளையில் ஷெல்லடி

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து தினமும் இரவு வேளைகளில் முகாமுக்கு அருகில் உள்ள கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருநகர், கனகபுரம், கணேசபுரம், பரவிப் பாஞ்சான், கிராமங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன.

அந்தப் பகுதிகளில் ஏற்கனவே பெரும்பாலன மக்கள் இடம் பெயர்ந்து விட்டதனால் இது வரை உயிர் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை முகாமில் இருந்து இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்படுகின்றன. [ஒ-76]

## யாழ். உ.அ.அ. பிரிவிலேயே அதிகம் பேர் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை.7

யாழ். மாவட்டத்தில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தே கூடுதலானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர சகல பிரிவுகளிலும்மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும், அங்கிருந்து இடம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஈரோஸ் எம்.பிக்கள் பதவி துறப்பார்கள்?

## இம்மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஈழத்தமிழர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு நிறுத்த வேண்டும். இல்லையேல் ஈரோஸ் எம்.பிக்கள் அனைவரும் பதவி துறந்து, நாடாளுமன்றப் பாதையிலிருந்து விலகிக் கொள்வார்கள்.

இதற்கான முடிவை ஈரோஸ் அமைப்பும் அதன் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியும் மேற்கொண்டிருப்பதாக அறியவருகிறது.

''ஈழத் தமிழர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் இம்மாதம் 15 ஆம் திகதியுடன் எம். பி. பதவிகளைத்துறந்து நாடாளுமன்றப் பாதையிலிருந்து முற்றாக விலகிவிடுவோம்''—இப்படி ஈரோஸ் தலைமைப்பீடம் ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவித்திருப்பதாகவும் அறியவந்தது.

நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பது என ஈரோஸ் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. (உ)

## வரதராஜப்பெருமாள் மீண்டும் அரசியலுக்கு வர சந்தர்ப்பம்

### உண்டு என்கிறார் அமைச்சர் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 7

வடக்கு - கிழக்குமாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் நாடுதிரும்பி மீண்டும் அரசியலில் பிரவேசிக்கும் சந்தர்ப்பம் எதிர்காலத்தில் உருவாகும்.

இவ்வாறு அமைச்சர் விஜேரத்னா நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அப்போது சொன்னதாவது:-

விடுதலைப்புலிகள் இனி ஆயுதங்களுடன் நடமாடமுடியாது.

ஜே, வி. பியினர் எம்முடன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வாகனங்களை நிறுத்துவதற்கு ஹெலியிலிருந்து எச்சரிக்கை வேட்டு

### படையினர் பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரம்

கொழும்பு, ஜூலை 7

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாகனங்களில் பயணம் செய்யும் பொது மக்களுக்கு பணிப்புரைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை பாதுகாப்புப் படையினர் விமானத்தில் இருந்து போட்டு வருகின்றனர்.

அரசு அறிக்கை ஒன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அரசுப் படையினருடன் மோதலில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் அப் பகுதிகளில் இருந்து தப்பிச் செல்ல பொது மக்களின் வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று பாதுகாப்புப் படையினர் கருதுகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் தீவிரவாதிகள் செல்லும் வாகனங்களை இனங்கண்டு கொள்ள முடியாது பாதுகாப்புப் படையினர் அவ்வாகனங்கள் தொடர்ந்து செல்ல அனுமதித்து வருகின்றனர்.

இதனால்பெரும்எண்ணிக்கையான தீவிரவாதிகள் தப்பிச் சென்று விடுகின்றனர்.

இந்த முயற்சியைத் தடுக்க தீவிரவாதிகளை ஏற்றிச் செல்லக் கூடிய எந்த ஒரு வாகனத்தையும் தாக்கும்படி விமான ஓட்டிகளுக்கு பாதுகாப்புப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

இத்தகைய வாகனங்களை எச்சரிக்கை செய்யாது அவர்கள் ஒருபோதும் தாக்கமாட்டார்கள்.

வாகனத்துக்கு அப்பால் ஒரு சில துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்படும்.

வாகனத்தை நிறுத்தும்படி உத்தரவிடும் சமிக்ஞையாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தமிழ்ப் பகுதியிலை வாகனத் தடையும் கொண்டு வருகினம் எண்டு சொல்லுங்கோ பின்னை......!

## வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த 40 பேர் கொண்ட குழு

### அரச அதிபர் தலைமையில் திங்கள் செல்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 7

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் 40 அதிகாரிகள் எதிர் வரும் திங்கட்கிழமை அங்கு செல்ல இருக்கிறார்கள்.

வவுனியா நிலைமை குறித்து நேற்றுக்காலை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அரச அதிபர் கூட்டத்துக்கு தலைமை வகித்து பேசுகையில்—

வவுனியாவில் அகதிகளாகியுள்ள ஒரு லட்சம் மக்களுக்கு வேண்டிய நிவாரண வேலைகளைச் செய்து, அவர்கள் கஷ்டத்தைப் போக்க வேண்டிய பெறுப்பு எம்மிடம் உள்ளது. அதை விடுத்து நாம் இங்கு தங்கியிருப்பது சரியல்ல—

அவர்கள் கஷ்டத்தைப் போக்குவதுடன், எமது நகரம் வீண்போகாமல் பாது

(4-ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

07-7-90

சனிக்கிழமை ஆனி 23

சுபநேரம்!

02-58—04-28

இராகுகாலம்

08-58—10-28

## ஒட்டமாவடி நோக்கி சென்ற ராணுவம் மீது தாக்குதல்கள்

### படையினர் திரும்பிச் சென்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புணானை முகாமிலிருந்து ஒட்டமாவடிநோக்கிச் சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் பல இடங்களில் வைத்துத் தாக்குதல் நடத்தினர்.

ஆலங்குளம் சந்தி, 4 ஆம் முச்சந்தி, ஒட்டமாவடிப் பாலம் ஆகிய இடங்களில் வைத்து தாங்கள் நடத்திய தாக்குதல்களை அடுத்து படையினர் பின்வாங்கி தமது முகாமுக்குத் திரும்பிச் சென்றதாக விடுதலைப்புலிகள்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## உணவுப்பொருள் வரும் அறிகுறி ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ் மாவட்டத்துக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எதுவும் நேற்றும் கொழும்பிலிருந்து அனுப்பப் படவில்லை. இதனைக் கொழும்பு அதிகாரி ஒருவர் நேற்று மாலை யாழ் அரச அதிபருக்குத் தெரிவித்தார்.

வடக்குக்குரிய உணவுப் பொருள்கள் லொறிகள் மூலம் அனுப்பப்படும் என்று கொழும்பு அதிகாரிகள் தினமும் கூறி வருகிறார்கள். ஆனால் அவை வந்து சேருவதாக இல்லை.

எனினும் யாழ் அரசஅதிபர் தினமும் கொழும்பு அதிகாரிகளுடன் உணவுப் பொருள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### அடக்குமுறையை நிறுத்துமாறு

## சர்வதேச சமூகம் அரசை நெருக்குதல் வேண்டும்

### மறுமலர்ச்சிக் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

தமிழ் பேசும் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசிற்கு சர்வதேச சமூகம் நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

-இவ்வாறு யாழ் பல்கலைக் கழக மாணவர்களின் மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

(இந்த விடயம் தொடர்பாக மறுமலர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விவரம் நாளைய உதயனில் வெளியாகும்.) (உ)

### சிக்கனமாக பாவிக்காவிடில்

## மின்சாரம் முற்றாக இல்லாது போகலாம்என்று எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

''மின்சாரத்தை சிக்கனமாகப் பாவியுங்கள். இல்லையேல் மின்சாரம் முற்றாகக் கிடைக்காமல் போகும் ஆபத்து ஏற்படும்''.

-இவ்வாறு யாழ். மாநகர மக்களை எச்சரித்திருக்கிறார் மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம்:

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாநகர சபைக்கு மின்சார சபையினால் மூன்று மின்னோடிகளால் 12 உப மின் நிலையங்களுக்கு மின்சாரம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி ஷெல் குருநகரில்! அகதிகள் தப்பிவிட்டனர்!!

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்டதாகக்கருதப்படும் நெடுந்தூரம் பாயும் [ஆட்லரி] ஷெல்கள் நேற்று முன்தினம் [வியாழன்] இரவு குருநகர்ப் பகுதியில் விழுந்து வெடித்தன,

ஆயிரக்கணக்கான அகதிகள் தஞ்சமடைந்திருக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குச் சமீபமாக இரு புறங்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. தெய்வாதீனமாக அகதிகளுக்கு எதுவித பாதிப்பும் இல்லை.

யாழ். ஆசனக்கோவில் பகுதி, கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலை மற்றும் சின்னக் கடைப் பகுதியிலும் ஷெல்கள் வீழ்ந்தன.

யாழ். ஆசனக்கோயில் பகுதியில் விழுந்த ஷெல்லினால், அங்குநின்ற மரம் ஒன்று சேதமடைந்தது. [ஒ-51]

## யாழ். பெரியாஸ்பத்திரி உடனடியாக இடம் மாறாது

யாழ்ப்பாணம், ஜூலை7

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உடனடியாக முந்திய இடத்துக்கு - யாழ். நகருக்கு - மாற்றப்படமாட்டாது.

ஆஸ்பத்திரிப் பகுதியை அமைதிப் பிரதேசமாக்கி, நோயாளர், ஊழியர்களின் பாதுகாப்புக்குசெஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் உத்தரவாதம் தரும்வரை யாழ்நகருக்கு ஆஸ்பத்திரியை மாற்றுவதில்லைஎன்று நேற்று முடிவு செய்யப்பட்டது.

மானிப்பாய் வைத்திய சாலையில் நேற்று நடைபெற்ற யாழ். ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள், நிர்வாகத்தினர் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ். ஆஸ்பத்திரியை விரைவில் திறப்பதற்கு உதவுமாறு கேட்பதெனவும் பிரஸ்தாப கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(4-ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் விற்பனைக்கு

அரியாலைச் சந்திக்கு அருகாமையிலும் பைஸ்ரியான் சந்திக்கு முன்பாகவும் புறொயிலர் விற்பனைக்கு உண்டு. விலை 55/- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் 1) தெய்வேந்திரம் 684, கண்டி வீதி, அரியாலை. 2. X. R. பிரான்சிஸ் (பைஸ்ரியான் சந்திக்கு முன்பாக) [13582]

### தாதி தேவை

நேரில் தொடர்பு கொள்ளவும், Dr. P சொர்ணலிங்கம், மாவடி முளாய் றோட், வட்டுக்கோட்டை. தொடர்பு நேரம்: காலை 7 மணியில் இருந்து 11 மணிவரை மாலை 3 மணியில் இருந்து 6 மணி வரை. (13580)

### வெளிவந்துவிட்டது

விரைவாக கணிப்பது எப்படி? How to Ca'culate Quickly? By Nagaratnam B. Sc (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு எந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்க்கும் இலகுவாகக் கணிப்பீடு செய்ய உதவும் நூல். (சி-4722)

### Rewinding வேலைகள்

Rewinding வேலைகள் [Fan. Motor, Water Pump Coils, Motor Cycle Coils போன்றவை) திறம்படச் செய்து கொடுக்கப்படும். Mini Centre 114. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/4737)

### V.K.M Farm Centre

தரமான முட்டையிடும் கோழிகளுக்கான தீனி விற்பனைக்கு உண்டு. எம்மிடம் புறொய்லர் இறைச்சிக்கோழியும் பெற்றுக் கொள்ளலாம். இல. 12 கனகசபை லேன், (யாழ். இந்துக் கல்லூரி பின் பக்கம்) யாழ்ப்பாணம். (13577)

## கமநல சேவை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7 எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் கமநல சேவைகள் நிலையத்தில் கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. ஆ. சிவசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கலந்துரையாடலில் தற்போதுள்ள சூழ்நிலையை சமாளிப்பதற்காக பயிர்ச் செய்கை முறையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படும்

இதில் சகல பெரும்பாக உத்தியோகத்தர்களையும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு சமிழிம ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-ம)

## ரயில்வேக்கு ரூ. 40 லட்சம் நஷ்டம்

வடபகுதி ரயில் சேவை நிறுத்தப்பட்டதால் ரயில்வே திணைக்களத்துக்கு மாதம் தோறும் 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருவதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ரயில்வே திணைக்களத்துக்கு இலாபத்தை ஈட்டிக் கொடுப்பது வடபகுதி ரயில் சேவைதான் என்றும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

## கல்லடியில் சிப்பாய்கள் இருவர் பலி

மட்டக்களப்பு. கல்லடியில் கடந்த புதனன்று இராணுவ சென்றியில் இருந்த சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர். [உ]

# தாவடியிலும் "பாயும்" ஷெல்!

யாழ்ப்பாணம், ஜூலை 7 பலாலியில் இருந்து ஏவப்பட்டதாகச் சொல்லப்படும் தொலைதூரம் பாயும் [ஆட்லறி) ஷெல் ஒன்று தாவடி தெற்குப் பகுதியில் விழுந்து வெடித்ததில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

கடந்த வியாழக்கிழமை 5 ஆம் திகதி நண்பகல் 12 மணி அளவில் இந்த ஷெல் விழுந்து வெடித்தது.

செல்லத்துரை நடராசா என்பவரது வீட்டு முற்றத்தில் ஷெல் விழுந்து வெடித்ததில் அவருடைய வீடு சேதமடைந்தது. அருகே இருந்த வீடு ஒன்றும் சேதமுற்றது. ஷெல் விழுந்த இடத்தில் ஓர் ஆழமான கிடங்கு ஒன்றும் காணப்பட்டது.

எனினும் வீட்டில் இருந்தோர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். [ஒ-10)

## சங்கானையில்

சங்கானை ப. நோ. கூ. சங்கம் இடம் பெயர்ந்தோருக்கான உணவுப் பொருள்களை குறிப்பிட்ட 6 கிளைகள் மூலம் வழங்கி வருகிறது. இவர்களுக்கான பெர்மிட் கிராம சேவை அலுவலர்களூடாக வழங்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தோரில் பெரும்பாலானவர்கள் காரைநகர், தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்கள். (இ-161)

## கடலிலிருந்து பீரங்கித் தாக்கு

# தொண்டமனாற்றிலிருந்து பலர் இடம் பெயர்ந்தனர்

சாவகச்சேரி, ஜூலை 7 கடலில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்களினால் தொண்டமனாற்றில் பல குடும்பங்கள் வீட்டை விட்டு வெளியேறின.

இவற்றில் சுமார் இருபது குடும்பங்கள் மட்டுவில் பகுதியை அடைந்தன.

காயம் அடைந்த சிலர் மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தின் போது பலர் வீடுகளில் உள்ள பொருள்களைக் கூட எடுக்காது வெளியேறி உள்ளனர்.

# வவுனியா, முல்லை, மன்னார் அகதிகளுக்கு சர்வோதயம் உதவி

வவுனியா, முல்லைத்தீவு, மன்னர் மாவட்டங்களுக்குள் இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு அவசர உதவியாக நேற்று முன் தினம் சர்வோதயம் உணவுப் பொருள்களை அனுப்பியுள்ளது.

சர்வோதய அதிகாரிகள் குழு ஒன்று லொறி மூலம் இந்த உணவுப்பொருள்களை அங்கு எடுத்து சென்றுள்ளது. (உ-3)

## தமிழ் சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர்

தமிழில் நிறைந்த தேர்ச்சியும், தமிழ் சுருக்கெழுத்து – தட்டெழுத்துத் துறையில் போதிய அனுபவம், வேகமும் உள்ள ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் ஆணாகவும், யாழ். நகரில் வசிப்பவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

இப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர் பகுதி நேரக் கடமை புரியத் தயாராக இருத்தல் வேண்டும்.

அத்தாட்சிப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இடமாற்றம்

141, 143 யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த

**நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்**

ஸ்தாபனம்

இலக்கம் 26 சேர் பொன் ராமநாதன் வீதியில் (பேபிபோட்டோவுக்கு எதிர்) இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

[13585]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**வேலு பிள்ளை சூசைப்பிள்ளை**

அவர்கள்

மண்ணில்: 11 – 04 – 1925
விண்ணில்: 07 – 06 – 1990

கண்ணை இமை காப்பது போல்
எங்களை வண்ணமுறக் காத்து
இறுதியில் மீளாத்துயில் கொண்டு
எம்மை ஆறாத்துயரில் விட்டுச்
சென்ற எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் பிரிவால் நித்தமும் வாடுகின்றோம்;

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

உடுப்பிட்டி. (13588)

## இடமாற்றம்

206, 208, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த

**சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி**

இல. 17, செம்மணி வீதி,
முத்திரைச் சந்தை நல்லூருக்கு
மாற்றப்பட்டுள்ளது.

9 - 7 - 90 திங்கட்கிழமை தொடக்கம்
விற்பனை ஆரம்பிக்கப்படும்.

முகாமையாளர்,
சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி
யாழ்ப்பாணம்.

(சி-4793)

## இடமாற்றம்

### நியூ விமாகி செரமிக்ஸ்

எமது ஸ்தாபனம் தற்காலிகமாக மானிப்பாய் இலங்கை வங்கி கிளைக்கு முன்பாக மாற்றப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

★ செரமிக் உற்பத்திப் பொருள்கள்
★ நிலத்திற்கும், சுவருக்கும் பதிக்கும் மாபிள் கற்கள்
★ பி (F) ளைவூட் கதவுகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

[சி-4790]

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

## அறிவித்தல்

**பால் விநியோகம்**

பொது மக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அரியாலை புங்கன்குளம் சந்தியிலுள்ள சிவசக்தி மெடிக்கல்ஸ் நிலையத்தில் 1990 – 07 – 07 ஆம் திகதி சனிக்கிழமை (இன்று) தொடக்கம் பால் விற்பனை செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பொது மக்கள் தங்களுக்குத் தேவையான பால், தயிர், நெய் போன்றனவற்றைத் தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்நிலையத்தில் கொள்வனவு செய்யலாமென்பதை அறியத் தருகின்றோம்.

**கால்நடை உணவு**

எமது உணவு ஆலையில் கால்நடை உணவு தயாரிப்பதற்கு பின்வரும் மூலப்பொருள்கள் தேவைப்படுகின்றன.

1. தவிடு
2. தேங்காய்ப் பிண்ணாக்கு
3. எள்ளுப் பிண்ணாக்கு
4. சோளம்

இப்பொருள்களை விற்பனை செய்ய விரும்புவோர் உடனடியாகச் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

சி. இராஜானந்தன்,
பொது முகாமையாளர்.

(சி-4789)

## ஓராண்டு கண்ணீரஞ்சலி



**செல்வன் சண்முகம் உதயவர்மன்**

[பேபி]

(மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித, விஞ்ஞானப்பிரிவு உயர்தர வகுப்பு மாணவனும், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும்)

அன்னையின் மடியில்: 27 – 02 – 1972
அந்நியன் பிடியில்: 19 - 06 – 1989

திதி: 07 — 07 — 1990

அன்பு மகனே பாசமுள்ள தம்பியே நினைவிழந்து நாம் கலங்கித் தவிக்கிறோம் சாவரினும் உன் நினைவு சாகாதய்யா. பேபியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அப்பா, அம்மா, அண்ணாமார்.

'உமா வாசம்'
புதுக்குடியிருப்பு,
[illegible]

73, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[13586]

## ராஜா ஸ்ரோர்

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் 36 முனீஸ்வரன் வீதியில் உள்ள ராஜாஸ்ரோர் மீன்பிடி உபகரண விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களின் நலன் கருதி கல்வியன்காடு விளையாட்டு மைதான வீதியில் அமைந்துள்ள (ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு அருகாமை) வீட்டிற்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(13581)

## றாஜு ஸ்ரோர்ஸ்

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் 67, 69, கஸ்தூரியார் வீதியில் உள்ள றாஜு ஸ்ரோரின் ஒரு பகுதி வாடிக்கையாளரின் நலன் கருதி நல்லூர் கந்தசாமி கோவிலின் முன்பாக இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**றாஜு ஸ்ரோர்ஸ்**

நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்,

[13565]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி ஜோ. புனிதராணி**

தோற்றம்: 15 – 06 – 1954
மறைவு: 02 – 07 – 1985

திதி: 07 — 07 — 1990

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் வாடும்:
சகோதர, சகோதரிகள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

[13584]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி**
**திருஞானம் கமலாம்பிகை**

(இளைப்பாறிய P W.D. ஓவசியர் R S திருஞானத்தின் அன்பு மனைவி)

தோற்றம்: 15 – 11 – 24
மறைவு: 19 – 06 89

திதி:- 07 — 07 — 90

ஆண்டு ஒன்று சென்றாலும் இன்னும் நீங்கவில்லை எம் துயர் அலைகள் ஆவி விடுத்துப் போன பின்பும் நாம் ஆயிரமாய் கலங்குகிறோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களை நினைவு கூரும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

றெயில்வே வியூ,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(13566)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஊர்காவலர் ஆகுங்கள்

எதிர்பார்த்தவாறு யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவுத் தட்டுப்பாடு வந்து கொண்டிருக்கிறது. கையில் இருந்த உணவுப் பொருள் இருப்புக் குறைந்து, மிகக் கீழ் மட்டத்துக்கு வந்துள்ளது. சுருங்கக் கூறின் உணவுப்பொருள்களுக்கு இருந்த பற்றாக்குறை நிலைமோசமடைந்து, தட்டுப்பாடு நிலை வந்துவிட்டது. இன்னும் ஒரு சில நாட்களில் பஞ்சநிலை வரக்கூடும்.

இப்படி ஒரு நெருக்கடியான வேளையில், உணவுப் பொருள்களையும், மற்றும் பாவனைப் பொருள்களையும் கொள்ளை அடிக்கும்கூட்டங்கள் ஊர்தோறும் இருப்பது தெரியவருகிறது. புங்குடுதீவு, அராலி, மட்டுவில ஆகிய இடங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொளளையிடப்பட்டிருக்கின்றன. அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், பாலுணவுப் பொருள்களையும் கொள்ளையர்கள் சுருட்டிச் சென்றுள்ளார்கள்.

இந்த யுத்த காலத்தில் கையில் இருக்கும் உணவுப் பொருள்களை, எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் ஒரு நிலை உருவாக்கப்பட வேண்டும். ஒரு சிலர் பல நாட்களுக்கு உரியதை சேகரித்து வைக்கவும், மற்றும் பலர் ஒரு நாள் அல்லது ஒரு நேர உணவுக்கும் வழியில்லாது கஷ்டப்படவும் வைக்கும் விதத்தில் உணவுப் பொருள் பங்கீடு இருத்தலாகாது. பதுக்கல், கொள்ளை லாபம் என்பன தலைகாட்டவும் இடங்கொடுக்கக் கூடாது.

இவற்றை எல்லாம் கண்காணித்துக் கொண்டு, திட்டமிட்டுத்திருடும் கூட்டத்தை விட்டு வைத்தால் பங்கிடுவதற்குக்கூட உணவு இல்லாத ஆபத்தான சூழ்நிலை உருவாகும். உணவுப் பொருள் இருப்பு முற்றாக வற்றிய பின்னர் பஞ்சம் வருவதற்குப் பதிலாக, அதற்கு முன்னரே வந்து விடும்!

பதுக்கல் செய்வோர் கொள்ளை லாபம் அடிப்போரை தேசத்துரோகிகள் என்கிறோம். அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்கின்றோம் அவற்றைச் செயற்படுத்திக் கொண்டு, கொள்ளையர்களை விட்டு வைத்தால்..?

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாயினும் சரி, தனியார் கடைகளானாலும் சரி இந்த இக்கட்டான வேளையில் கொள்ளைகள், திருட்டுக்களை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எங்கள் பகுதிகளில் பொலீஸ் இல்லை அவர்கள் சம்பளத்துக்குப் பணி புரிபவர்கள். அவர்களுக்குப் பதில் மக்களுக்காகப் பணி புரியும் ஊர்காவலர்கள் தேவை. ஊர்காவலர்களாகப் பணிபுரிய அந்தந்தக் கிராமத்தில், குறிச்சியில் உள்ள இளைஞர்கள், மாணவர்கள், வயதானவர்கள் எல்லோரும் முன்வர வேண்டும்.

கிராமங்களில் விழிப்புக் குழுக்கள் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். அந்த குழுக்களில் கிராமத்தில் வசிப்பவர்கள் அங்கத்தவராக வேண்டும். அந்த அங்கத்தவரே நாம் மேலே குறிப்பிட்ட ஊர்காவலர்கள் ஆக வேண்டும்.

உணவுப் பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்களை இரவு நேரங்களில், சுழற்சி முறையில், காவல் புரிய வேண்டும் அப்போது, கொள்ளையர்களிடம் இருந்து, மக்களுக்கு இப்பொழுது அருமருந்தாகக் கிடைக்கும் உணவுப் பொருள்களை நிச்சயமாகக் காப்பாற்றலாம். கொள்ளையர்களையும் பிடித்துத் தண்டிக்கலாம்.

விழிப்புக் குழுவினரும், ஊர்காவலர்களும் உடன் தேவைப்படுபவர்கள். கொள்ளைகள் முந்திய மூன்று இடங்களில இருந்தும் வேறு இடங்களுக்குப் பரவாமல் தடுப்பதற்கு குடாநாடு முழுவதிலும் இன்றே அவை அமைக்கப்பட்டாக வேண்டும்.

### காரைநகரில் தாக்குதல்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் பீரங்கிப் படகிலிருந்தும் புதன் கிழமையன்று 10.00 மணியளவில் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இவை சீநோர் தொழிற்சாலை, டிப்போ பகுதிகளில் விழ்ந்து வெடித்தன. வயல் வெளிகளிலும் சில ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அடிக்கடி இடம்பெறும் தாக்குதல்களை அடுத்து சீநோர் தொழிற்சாலை உபகரணங்கள் மற்றும் பொருள்கள் யாவும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. (ஒ-ரி)

### சீனிக்கு தட்டுப்பாடு

யாழ்-பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சீனிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சீனி கையிருப்பில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கும், இடம் பெயர்ந்துள்ளவர்களில் குழந்தைகள் உள்ளோருக்கும் மட்டும் அரை கிலோ சீனி வழங்கி வருகின்றன. (இ-10)

### பல்கலைக்கழக மாணவருக்கான வகுப்புக்கள்

பல்கலைக் கழகத்தில் புதிதாக அனுமதி பெற்றோருக்கான ஆங்கில வகுப்புக்களும் தொழில் அறிமுறைத்திட்டமும் யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் கட்டடத் தொகுதியில் ஆரம்பமாகி உள்ளன.

இந்த வகுப்புக்கள் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.00 மணியில் இருந்து 10.30மணிவரை நடைபெறும் என்று இந்த திட்டத்துக்குப் பொறுப்பான யாழ். இந்துக் கல்லூரி நிலைய இணைப்பு அதிகாரிதிரு. என். தேவபாலசிங்கம் தெரிவித்தார். (இ)

### குடிதண்ணீர் விநியோகம் சீராகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். நகருக்கான குடிதண்ணீர் விநியோகம் இன்று சனிக்கிழமை முதல் மீண்டும் வழங்கப்படலாம் என யாழ். மாநகரசபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின்போது தண்ணீர் விநியோகக் குழாய்கள் பெரும் சேதமடைந்தன என்பது தெரிந்ததே. (ஒ-10)

# மில்லர் பாணித் தாக்குதலுக்கு நூற்றுக்கணக்கான புலிகள் தயார்

## நெல்லியடிக் கூட்டத்தில் வடமராட்சிப் பொறுப்பாளர்

யாழ்ப்பாணம் ஜூலை 7

கப்டன் மில்லர் பாணியில் தற்போது தாக்குதல் நடத்த நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் தயாராகி இருக்கின்றனர். எந்த இலட்சியத்துக்காக 1500 க்கு மேற்பட்ட எமது போராளிகள் உயிர் இழந்தார்களோ அந்த இலட்சியம் வென்றெடுக்கப் படும்வரை எமது போராட்டம் கரும்புலி மில்லரின் வரிசையில் தொடரும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வியாழனன்று நடைபெற்ற கரும்புலி கப்டன் மில்லரின் 3 ஆவது ஆண்டு நினைவு தினக்கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் வடமராட்சி இராணுவப் பொறுப்பாளர் சூசை மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசியதாவது:-

100 க்கு மேற்பட்ட ஸ்ரீலங்கா படையினரை கொன்றழித்தவர் கப்டன் மில்லர். எவரும் நிர்ப்பந்தித்து அவர் இந்த முடிவை ஏற்கவில்லை. தனது இழப்பினால் தமிழீழ போராட்டம் முனைப்படையும் என எதிர்பார்த்தே இந்த முடிவை அவர் ஏற்றுக்கொண்டார்.

வெடிகுண்டுடன் கூடிய வாகனத்தை நெல்லியடி முகாமினுள் செலுத்தி முகாமை தகர்த்து தாக்குதல் மேற்கொள்ளத் திட்டமிட்டோம்.

அதன்படி வாசலிலிருந்த பாதுகாப்பு அரன்களை மட்டக்களப்பு மண்ணில் பிறந்த மேஜர் கமல் நிர்மூலமாக்கிப் பாதைஅமைத்துக் கொடுக்க, மில்லர்வெடிகுண்டு அடங்கிய லொறியை முகாமின் வாசலை நோக்கிச் செலுத்தினார். முகாம் நிர்மூலமானது.

கப்டன் மில்லர் தன்னை காற்றோடு கற்றாக கலக்க விட்ட நேரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொன்றொழிக்கப் பட்டனர்.

வின்சன் (நெடுங்கேணி) என்பவரோடு 3 பேர் மட்டுமே இத்தாக்குதலை வெற்றி கரமாக மேற்கொண்டனர்.

ஓர் இக்கட்டான சூழ்நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதல் தமிழீழ போராட்டத்தில் திருப்பு முனையாக அமைந்தது.

இப்படி அவர் கூறினார்.

**யோகி**

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி தமது உரையில் கூறியதாவது:-

தமிழீழ போராட்டத்தில் மூவர் முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். ஒருவர் கரும் புலி கப்டன் மில்லர் மற்றவர் தியாகி திலீபன், மூன்றாமவர் அன்னை பூபதி.

இந்த மூவருக்கும் தமது சாவு நிச்சயம் என்று தெரியும். தாம் சாகப் போகிறோம் என்று தெரிந்தே போராட்டத்தில் குதித்தவர்கள். ஆனால் திலீபன் அன்றைய சூழ்நிலையை எண்ணி அகிம்சையை அன்றைய ஆயுதமாக பாவித்தாரே ஒழிய அவர் அகிம்சையை நம்பியவர் அல்ல.

அதேபோல மில்லர் ஆயுதமேந்திய போராளி இருவருமே சூழ்நிலைக்கேற்ப வித்தியாசமான வடிவில் போராட்டத்தை நடத்த முன்வந்தவர்கள். வடமராட்சி தமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. புலிகள் அழிந்தார்கள், தமிழீழப் போராட்டம் ஒடுக்கப்பட்டது என ஸ்ரீ லங்கா அரசு கொக்கரித்துக் கொண்டிருந்த வேளையிலேயே நெல்லியடி முகாம் தாக்குதல் நடத்தப்பட்டது. இது எமது போராட்ட வரலாற்றின் திருப்பு முனை.

அன்றைய நாளில் வெடிகுண்டு நிரப்பப்பட்ட லொறியின் அருகில் நாம் மில்லரை சந்திக்கிறோம். அதே அமைதி, அதே புன்முறுவல், எப்போதும் எதையுமே புன்முறுவலுடன் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அன்றைய தினம் தனது சாவு நிச்சயம் என்று தெரிந்த பின்பும் மில்லரிடம் ஒரு பதற்றத்தையும் நாம் காணவில்லை.

இப்படி அவர் கூறினார்.

**ஜெலீமா**

மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்த ஜெலீமா பேசுகையில் இதுவரையில் 1500 க்கு மேற்பட்ட போராளிகள் தமிழீழ போராட்டத்தில் உயிரிழந்து விட்டார்கள். ஆனால் பெண்களில் 27பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர். எமது சனத்தொகையில் 60 சதவீதத்தை பெண்கள் வகிக்கிறார்கள். ஆனால் போராட்டத்தில் கலந்து கொள்ள முன் வருகிறார்களில்லை என்றார்.

**செங்கதிர்**

விடுதலைப்புலிகளின்மக்கள் முன்னணி பிரமுகர் செங்கதிர் உரையாற்றுகையில்

கெரில்லா தாக்குதல் வடிவமான கரும்புலி தாக்குதலைப்பொறுப்பேற்று கப்டன் மில்லர் தன்னுயிரை அர்ப்பணித்தார்.

இந்திய வல்லாதிக்கத்தின் முகத்திரையைகிழித்தெறிந்து தமிழீழ மக்கள் ஒன்றுபட்டு தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும். தலைவர் பிரபாகரனின்கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று கூறிதியாகிதிலீபன் தன்னுயிரைஅர்ப்பணித்தான்.

இந்திய வல்லாதிக்க அரசின் சூழ்ச்சிக்கு பலியாகிஸ்ரீலங்கா அரசு கொழும்புக்கு கொண்டு செல்ல எடுத்த முயற்சியை முறியடித்து குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகள் தம் முயிரை அர்ப்பணித்தனர்

இது போன்ற ஆயிரக்கணக்கான போராளிகள் களத்தில் தம்முயிரை கொடுத்து மண்ணை மீட்க போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஸ்ரீலங்கா அரசு பொருளாதார தடையை விதித்துள்ளது. இது எம்மீது சுமத்தப்பட்டுள்ளமிகப்பெரிய சவாலாகும். இந்த பொருளாதார தடையிலிருந்துநாம் மீண்டு எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த சவாலை முறியடித்து நாம் பலம்மிக்கவர்கள், வலுஉள்ளவர்கள் என்பதை உலக அரங்குக்கே காட்ட வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-9)

### நில அளவையாளர் முற்பணம்

நில அளவைத் தொழிலாளர்கள் தாம் வேலை செய்யும் நில அளவையாளர்களைச் சந்தித்து ஜூன் மாத சம்பள முற்பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்குப் பொறுப்பான நிலஅளவை அத்தியட்சகர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

மேலும் நில அளவையாளர்கள் உதவி நில அளவை அத்தியட்சகர்களைச்சந்தித்து சம்பள முற்பணம் மற்றும் ஆலோசனைகளைப் பெறுமாறும் கோரப்பட்டுள்ளது.

# ஜெனரேட்டர் உதவியால் மருந்து வகைகள் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூலை7

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டுள்ள பெறுமதி மிக்க மருந்துவகைகள் ஜெனரேட்டரில் இருந்து பெறப்படும் மின்சாரம்மூலம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மின்சார சபை ஊழியர்கள் இதற்கான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தற்போதைய அவசர தேவைகளை ஜெனரேட்டரின் உதவியால் நிறைவேற்ற முடிகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## யாழ். மாவட்டத்துக்கு

# அத்தியாவசிய பொருள்களை அனுப்பி வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை உடன் அனுப்பி வைக்குமாறு அரசு சார்பற்ற நிறுவன கூட்டுக் கமிட்டியிடம் நான்கு அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

ரெட்பானா, போரூட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், சர்வோதயம் ஆகியவையே இந்த நான்கும் ஆகும். (இ-3)

# ஐந்து லட்சம் ரூபா வரை மக்கள் வங்கிக்கு நஷ்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

விமானத் தாக்குதலினால் யாழ் பிரதானவீதிமக்கள்வங்கிபிரதேச அலுவலகத்துக்கும்நவீனசந்தைமக்கள்வங்கிக்கிளைக்குக் சுமார் ஐந்து இலட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் பிரதேச அலுவலகத்தையுப், நவீன சந்தைக் கிளையையும் மீண்டும் பழைய இடங்களில் ஆரமபிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# வெளிமாவட்ட வங்கி ஊழியர் இங்கு கடமையாற்ற ஏற்பாடு

வெளிமாவட்டங்களில் கடமையாற்றிய மக்கள் வங்கி உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் கடமையாற்றுவதற்கான தற்காலிக ஒழுங்குகளை வட பிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கிளிநொச்சி, மாங்குளம், முல்லைத்தீவு, பரந்தன், வவுனியா, மன்னார், காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளைகள் மூடப் பட்டுள்ளன.

இந்தக் கிளைகளில் கடமையாற்றிய சுமார் 150 க்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (இ-10)

# வவுனியா அகதிகள் மட்டுமே இன்று அழைத்து வரப்படுவர்

கொழும்பு, ஜூலை 7

இன்று சனிக்கிழமை கொழும்பில் இருந்து புறப்படும் பஸ்களில் வவுனியாவைச் சேர்ந்த அகதிகள் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அத்தியாவசிய ஆணையாளர் நாயகம் சரித்த ரத்வதை தெரிவித்தார்.

முன்னர் இவ் பஸ்களில் கொழும்பில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள யாழ் குடாப் பகுதி அகதிகளும் அழைத்துச் செல்லப்படுவதாக இருந்தது. (இ-எ)

### பனிக்கட்டி ஆலையில் திருட்டு

குருநகர் ஜூலை 7

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச பனிக்கட்டி ஆலை வியாழன் பகல்உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப் பட்டுள்ளன.

யாழ். முதலாம் குறுக்கு வீதியில் கடற்கரை வீதிக்குச் சமீபமாக அமைந்துள்ள இந்த பனிக்கட்டி ஆலை. இதன் முன்பக்கக்கதவுபெயர்க்கப்பட்டு ஆலையில் இருந்த இயந்திர சாதனங்களும், சிறிய மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றும் களவாடப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (இ - 51)

### திருமலையில் தேடுதல் தீவிரம்

கொழும்பு ஜூலை 7

திருகோணமலை மாவட்டத்தில் ஆயுதப் படையினர் தங்கள் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்

திருமலை ரயில் நிலையத்துக்கு அருகில் புதைக்துவைக்கப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர் என்று பாதுகாப்புப் அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (இ - எ)

### சூசையப்பர் ஆலயத்தில் அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்திலும் அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இங்குள்ள அகதிகளுக்கான நிவாரண வேலைகளை இப்பகுதி கிராம சேவையாளரின் மேற்பார்வையில் கொழும்புத்துறை வளன்புரம் ஐக்கிய சனசமூக நிலைய நிர்வாகிகள் கவனித்து வருகின்றனர். (ஒ)

# சுவருடன் ஒட்டினாற் போல நிற்காதீர்கள்; ஜன்னல் கண்ணாடிகளுக்கு துணிபோட்டு ஒட்டுங்கள்

**குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?**
**பகுதி II**

(முன் தொடர்ச்சி)

அருகில் பாதுகாப்புக்குரிய விசேட அமைப்புக்கள் எதுவும் இல்லாத இச்சந்தர்ப்பங்களில் அவற்றினை நோக்கி தொலை தூரங்களுக்கு ஓட முயற்சிக்க வேண்டாம் நீங்கள் செய்ய வேண்டியது அவ்விடத்திலேயே குப்புறவிழுந்து படுப்பதேயாகும். தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெறுமாயின், ஒரு தாக்குதலுக்கும், அடுத்த தாக்குதலுக்கும் இடைப்பட்ட நேரத்தில், அருகில் உள்ள பள்ளங்களினுள்ளோ அல்லது நீர் வடிந்து செல்வதற்குரிய வடிகால்களினுள்ளோ உருண்டு சென்று விடுங்கள், அது உங்களுக்குக் கூடியளவு பாதுகாப்பைத் தரக்கூடியது.

**காதுகளை அடையுங்கள்**

குப்புறப் படுக்கும் போது, நெஞ்சுப் பகுதியை நிலத்தில் இருந்து சற்றே மேலே தூக்கியவாறு, முழங்கைகளால் தாங்கிக் கொள்ளுங்கள் காதுகளைப் பருத்தித் துணித் துண்டுகளினால் அடைத்து விடுங்கள். அது இல்லாவிடின் உங்கள் வேட்டியோ, சேலையோ, சட்டையோ எதுவாயினும் ஒன்றினது தலைப் புகளினால் நன்கு அடைத்து விடுங்கள். உருட்டிய கைக்குட்டை அல்லது உடைகளின் ஒரு பகுதியை பற்களுக்கிடையில்இறுகக் கடித்துக் கொள்ளுங்கள். இவற்றின் மூலம்வெடிப்பதிர்வினால், செவிப்பறை மென்சவ்வுபாதிப்படைவதோ அல்லது நாக்கு கடிபடுவதோ தவிர்க்கப்படும். விமானத் தாக்குதலின் போது திறந்த வெளிகளில் இருந்து ஒரு போதும் மேலே பார்க்காதீர்கள். ஏனெனில் வேறெவற்றையும்விட மனித முகங்கள் இலகுவாக அடையாளம் காணக்கூடியனவாகும்.

**பூட்டிய கட்டிடமொன்றின் அருகில் உள்ளபோது**

சட்டிடத்தின் வெளிச் சுவருக்கு அருகிலோ அல்லது கதவு வழிகள், வேறு உள் நுழை வழிகள் [Arch ways] போன்றவற்றின் அருகிலோ நிற்பது பாதுகாப்பானதாகும். சுவர்களுக்கு அருகில் நிற்கும்போது, அவற்றுடன் ஒட்டினாற்போல சாய்ந்தவாறு நிற்கக்கூடாது.

கட்டிடத்தினுடைய அறை ஒன்றினுள், ஜன்னல்கள் ஏதுமற்ற, வெளிச் சூழலுடன் தொடர்பில்லாத சுவரொன்றினைத் தெரிவுசெய்து அதன் அருகே நிற்கவும். ஆனால் கதவு அல்லது ஜன்னல்கள் போன்றவற்றின் நேரே நிற்க வேண்டாம். உடைந்து சிதறும் கண்ணாடித்துண்டுகள் ஆபத்தானவை. இவற்றைத் தவிர்ப்பதற்காகக் கண்ணாடி ஜன்னல், கதவுகளில் இருந்து விலகி சுவர் திருப்பங்களிலே நிற்பதே சிறந்த[illegible].

**பஸ்ஸில் இருந்தால்**

உடனடியாக பஸ்ஸினை நிறுத்தச் செய்து வெளியே இறங்கி திறந்த வெளியில் உள்ளபோது செய்ய வேண்டியதைப் போல் குப்புறவிழுந்து படுக்கவும்.

**காரில் இருந்தால்**

வீதியின் இடதுபக்க ஓரமாகக் காரை நிறுத்தி, ஜன்னல்களை திறந்தபடியே விட்டு, கார்க் கதவுகளை பூட்டாமல் சாவியை அதற்குரிய இடத்தில் செருகியபடியே விட்டு விட்டு. காரினை விட்டு இறங்கி ஓடிச் சென்று வீதியோரத்தில் உள்ள போது செய்வதைப் போல் குப்புறப் படுக்க வேண்டும். கார் திறந்தபடியே சாவியுடன் இருப்பதனால், தற்செயலாய் நீங்கள் காயமுற்றிருந்தால் உங்களை வேறு யாராவது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு இலகுவாயிருக்கும்

மாட்டுவண்டியில் இருக்கும் போது குண்டு வீச்சு நடந்து கொண்டிருந்தால் உடனடியாக கீழே குதித்து ஒரு சிலயார் ஓடிச்சென்று குப்புற விழுந்து படுங்கள். சிறிது நேர அவகாசம் கிடைக்குமாயின் மாடுகளை அவிழ்த்து அருகிலிலுள்ள பெரிய மரமொன்றில் கட்டி விடவும்.

**வீடுகளில்அலுவலகங்களில்**

இனி உங்களது வீடுகளில், கடைகளில், தொழிற்சாலைகளில் உள்ள போது எவ்வகையான விஷேட அமைப்புக்களின் மூலம் உங்களைப் பாதுகாக்க முடியும் எனப் பார்ப்போம்.

முதலில் [illegible]மாக உள்ள கட்டிடங்கள் ஓரளவாவது வெடிப்பதிர்வுகளில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான முறையில் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும் இவ்வகையில் மாற்றி அமைக்க எடுக்கும் முயற்சிகள் இப்போதுள்ள சூழ்நிலையில் உங்களை விமானப் படையினர் விஷேடமாகக் கவனிப்பதற்கு வழிவகுத்து விடும். எனவே அவ்வப்போதுள்ள சூழ்நிலைகளுக்கும், உங்கள் வசதிக்கும் ஏற்றவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டும்.

சில முக்கியமான பொருள்களைக் கொண்டு கட்டடங்கள் போன்றவை விசேடமாகக் கவனிக்கப்பட்டு, முழுமையான பாதுகாப்புக்கு உட்பட்டவையாக மாற்றப்பட வேண்டியதும் அவசியமாகும்.

கட்டிடமொன்றின் கண்ணாடி அமைப்புகள் விசேட

**தகவல் மேடை**

மாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில் கண்ணாடிகள் உடையும் போது பெருமளவில் சிதறக் கூடியவை. அத்துடன் ஆபத்தை ஏற்படுத்தும் கூரான பொருட்களும் கூட. இக் காரணங்களினால் கதவு, ஜன்னல்களில் பொருத்தப் பட்டிருக்கும் கண்ணாடிப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதாவது உடையும் கண்ணாடியின் பகுதிகள் சிதறிப் பறக்கா வண்ணம் காப்பிடுதல் வேண்டும். இதற்காக தடித்த துணிகளினால் கண்ணாடியின் மேல் ஒட்டி விடுதல் ஒரு முறையாகும். அத்துடன் வெளிச் சூழலுடன் தொடர்புள்ள ஜன்னல்களின் ஊடாக அவற்றின் கண்ணாடித்துண்டுகளுடன் பிற சிறு பொருள்களும் உள் நுழையக் கூடியதால், ஜன்னல் சட்டங்களின் உட்பக்கத்தில் 1/2 அங்குல கம்பி வலைகள் மூடி அடிக்கப்படுதல் வேண்டும்.

வெளி வாசல்கள் போன்றவை கூட சிதறு துண்டுகளையும் வெடிப்பதிர்வுகளையும் உள்விடக் கூடியன ஆதலால் அவையும் மூடப்படுதல் வேண்டும்இதற்காக வாசலுக்கு வெளியே நில மட்டத்தில் இருந்து குறைந்தது 6 அடி உயரத்திற்கு சுவர் போன்ற அமைப்பு கட்டப்படுதல்வேண்டும் இதற்காக செங்கல் உபயோகிக்கப்படுமாயின் 13 1/2 அங்குல தடிப்புள்ளதாகவும் (1 1/2 செங்கல்தடிப்பு) கொங்கிறீற் உபயோகப் படுத்தப் பட்டால் 9 அங்குல தடிப்புள்ளதாகவும் அச்சுவர் அமைய வேண்டும்.

**மணல் மூடைகளை அடுக்கலாம்**

சுவர் கட்டுவதற்குரிய வசதி இல்லாவிடின் மணல் மூடைகளோ அல்லது இலகுவில் கிடைக்கக் கூடிய மரங்களோ சுவர் போன்று அடுக்கப்படுதலும் பாதுகாப்பானதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீமியா உரம்

ஏர் உழவர் பெருமக்களே!
நிலத்தை உழும் பொழுது
நீமியா உரம் சேர்த்து உழுது
விதைத்தால் மிக்க விளைச்சல்
நிச்சயம் உண்டு.

1 கிலோ பக்கெற் ரூபா 5.00
தொகையாக வாங்குவோர்க்கு
சகாய விலை — அன்பளிப்பு
''விவசாயக் கைநூல்''

மில்க்வைற்-யாழ்ப்பாணம்

# உதயன்

07 - 7 - 1990 சனிக்கிழமை

நேரம் பொன்னானது

மில்க்வைற் சலவைப் பவுடர்
50 கிறாம் பக்கெற் ரூ. 2.75

இவை பதிந்துவரும் காட் 100
பெற்றுத்தரும் அன்பளிப்பு
✶ ஒரு துவாய் ✶

மில்க்வைற்-யாழ்ப்பாணம்

## நெருக்கடி நிலைமை குறித்து மாணவர் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இன்றைய நெருக்கடி நிலைமைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கும் வகையில் மாணவர்களுக்கான கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் செய்து வருகிறது.

இதன்படி இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கோப்பாய்உதவி அரச அதிபர் பிரிவுமாணவருக்கான கலந்துரையாடல் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு மாணவர்களுக்கான கலந்துரையாடல் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும்-

அன்றைய தினம் (ஞாயிறு) மாலை 4 மணிக்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர்பிரிவு மாணவர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நடைபெற உள்ளன. (ஒ)

## மற்றைய கிளைகளுக்கு ஸ்ரான்லி வீதியில் கருமபீடம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் பிரதான வீதி, நவீனசந்தை, ஸ்ரான்லி வீதி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் கணக்கு வைத்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இன்றும் (சனிக்கிழமை) காலை 9மணி முதல் 11மணி வரை காசோலைகளை ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தலாம் என வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேற்படி ஒவ்வொரு வங்கிகளுக்கும் யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் கருமபீடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் கூட்டுறவுச் சங்கங்கள் தமது காசோலைகளை செலுத்தலாம் என்றும், காசோலைகளுக்கான கொடுப்பனவுகள் திங்கட்கிழமை வழங்கப்படும் என்றும் பிரதேச முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம் தெரிவித்துள்ளார். (உ-10)

## காஷ்மீர் கலவர பிரதேசம்

ஸ்ரீ நகர், ஜூலை 7

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை கலவரப் பிரதேசமாக ஆளுநர் கிரிஷ் சந்திரா சக்ஸேனா கடந்த வியாழன் பிரகடனப் படுத்தினார்.

இதன்படி நான்கு பேருக்கு மேல் ஒரு பொது இடத்தில் கூடுவது தடை செய்யப்பட்டு உள்ளது. குழப்பம் ஏற்படுத்துபவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கும் இந்த பிரகடனம் அதிகாரம் வழங்குகிறது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆளுநர் திரு. சக்ஸேனா இப்பிரகடனத்தை வெளியிட்டார். (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சிவஞானசம்பந்தன்

சரவனை மேற்கு செல்லையா சிவஞானசம்பந்தன் அவர்கள் 4-7-1990 காலமாகிவிட்டார். இவர் யா/செட்டி புலம் அ.த.க. பாடசாலை முன்னாள் அதிபரும், சரவணையூர் சோதிடரும், காலம் சென்ற செல்லையா, சொர்ணம்மாவின் சிரேஷ்ட புதல்வரும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், காலம் சென்ற சிவானந்தன், குகானந்தன் (மே. ஜேர்மன்), தயாநிதி, கலாநிதி (இத்தாலி), கருணாநிதி, அருணாநிதி, வசந்தி, சொர்ணநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (Bisnerss Colombo) பத்மறஞ்சன், தனுஷியா, அனுஷியா அவர்களின் அன்பு மாமனாரும், காலம் சென்றவர்களான திருஞானசம்பந்தன் (Lake House, Colombo-1) ஏகநாயகம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம்சென்ற கந்தையா, சிவபாக்கியத்தின் மருமகனும், சோதிப்பிரியா, கிருத்திகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் புதவுடல் (5-7-1990) வியாழக்கிழமை சரவணை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
இ. சித்தானந்தன்

(13587)

## திருமதி இரத்தினம் வீரசிங்கம்

திருமதி இரத்தினம் வீரசிங்கம் காலமானார்.

இவர் அச்சுவேலியைச் சேர்ந்த காலம் சென்ற ச. வீரசிங்கம் (முன்னாள் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. தர்மசங்கரி, காலம் சென்ற கணேசசங்கரி, இராஜசங்கரி, திரு. ஆனந்தசங்கரி, திரு. சகாதேவசங்கரி (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), திருமதி மதியாபரணம், ஞானசம்பந்தன், திரு. பரதசங்கரி, காலம் சென்ற ஞானசங்கரி, மங்கையற்கரசி, ஜெயசிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது ஈமச்சடங்குகள் தோப்பு, அச்சுவேலியில் 07 - 07 - 1990 இன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
வி. சகாதேவசங்கரி.

தோப்பு,
அச்சுவேலி.

(13497)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 7

குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய மினிபஸ் சேவைகள் சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா இதனைத் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

டீசல் இல்லாத போதும் மக்கள் நலன் கருதி மட்டுப்படுத்தப்பட்ட சேவையை நடத்தி வருகிறோம்.

வடமராட்சிப்பகுதிக்கும், முல்லைத்தீவு, வவுனியா, கேரதீவு, கிளிநொச்சிப்பகுதிகளுக்கும் நல்லூர் முத்திரைச் சந்தியில் இருந்து பஸ்சேவைகள் நடைபெறுகின்றன.

அராலி, காரைநகர் பகுதிக்கு ஓட்டுமடம் சந்தியில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

பஸ்சேவைகள்நடைபெறாத மற்றைய பகுதிகளுக்கும் சேவைகள் நடத்தப்படவிருக்கின்றன.

இப்படி அவர் கூறினார்.

சகல பஸ் உரிமையாளர்களையும், சங்க உறுப்பினர்களையும் டீசல் பிரச்சினை சம்பந்தமாக ஆராய நாளை ஞாயிற்றுக்கிழமை முத்திரைச் சந்தியில் உள்ள பஸ் நிலையத்தில் கூடுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-3)

## அரச அதிபர் கூட்டும் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்-மாவட்ட உணவு விநியோகம், நிவாரணம் ஆகிய விடயங்கள் பற்றி ஆராய இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறஇருக்கிறது.

யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு சகல உதவி அரசாங்க அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அகதி முகாம்களின்நிலை- இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கல் போன்ற விடயங்கள் பற்றி முக்கியமாக ஆராயப்பட உள்ளது. (இ-3)

## மாகாணசபை கலைப்பு: சட்டமூலங்கள் நிறைவேறின

கொழும்பு, ஜூலை 7

மாகாணசபைகள் சட்டம், மாகாணசபைகள் தேர்தல் சட்டம் ஆகியவற்றுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டமூலங்கள்நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

மாகாணசபைத் திருத்தச் சட்டமூலங்களுக்கு ஆதரவாக 119 வாக்குகளும் எதிராக 70 வாக்குகளும் கிடைத்தன.

அனைத்து எதிர்க்கட்சிகளும் திருத்தச் சட்ட மூலங்களுக்கு எதிராக வாக்களித்தன,

**புலிகள் அழிக்கப்படுவராம்**

விவாதத்தின் ஒரு கட்டத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னதாவது:-

அரசுடன் பேச்சு நடத்திய போது கூறியவற்றுக்கு முரணாக விடுதலைப் புலிகள் நடந்துகொண்டனர். அரசாங்கத்தை ஏமாற்றியதற்காக விடுதலைப் புலிகள் தண்டிக்கப்படுவார்கள்.

உலகின் நான்காவது பெரிய படையான இந்தியப் படையைத் தோக்கடித்துக் காட்டியதாகக் கூறும் விடுதலைப் புலிகள், இலங்கை இராணுவத்தால் இந்த உலகில் இருந்து முற்றாக அழிக்கப்படுவார்கள். — என்றார். (அ-எ)

## மின்சாரம் முற்றாக------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டு வந்தது.

இரு வாரங்களுக்கு முன்னர் நடந்த விமானக் குண்டுத் தாக்குதலினால் மின்சார சபையின் இரண்டு மின்னோடிகள் சேதமாக்கப்பட்டன.

தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு சேதமாக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று திருத்த வேலைகளைச் செய்ய இயலாதிருக்கிறது.

யாழ். மாநகர சபையின் மின் பாவனையாளர்களது நலனைக் கருத்திற் கொண்டு இந்த 12 உப மின் நிலையங்களுக்கும் தற்பொழுதுள்ள ஒரேயொரு மின்னோடி மூலம் தொடர்பை ஏற்படுத்தி பகலிலும், இரவிலும் சுழற்சி முறையில் மின்சாரத்தை வழங்கும்படி இலங்கை மின்சார சபை மாநகர சபைக்குக் கோரிக்கை விடுத்து, மின்சாரத்தை வழங்கியுள்ளது:

தற்போதைய சூழ்நிலையில் மின்சாரம் பெறுபவர்கள் குறைந்தளவு மின்சாரத்தைப் பாவித்தால் தங்களது பகுதிகளுக்குக் கிடைக்கும் மின்சாரத்தை இடையீடின்றிப் பெறமுடியும். ஆகவே மின் பாவனையாளர்கள் இரவு வேளைகளில் தனியே வெளிச்சத்திற்கு மட்டும் மின்சாரத்தைப் பாவிக்குமாறு கோருகிறேன்.

தற்போதுள்ள மின்னோடிக்கு அதிக மின் சுமை ஏற்பட்டு அது சேதமடைய நேரிட்டால் அதிக நாட்களுக்கு மாநரக சபைப் பகுதியிலுள்ள மக்களுக்கு மின்சாரம் முற்றாகக் கிடைக்காது போகும் ஆபத்து ஏற்படலாம் என்பதையும் மக்கள் மனதிற் கொள்ளவேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா ஊழியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வவுனியாவில் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் ஜூன் மாதச்சம்பளத்தை செவ்வாய்க்கிழமை வழங்க வவுனியா அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வவுனியாவில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 300 ஊழியர்கள் தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ளனர். (இ:3)

## பயிலுநர் ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகல பயிலுநர் ஆசிரியர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இந்து மகளிர் கல்லூரியில் கூடுமாறு பயிலுநர் ஆசிரியர் சங்கம் கேட்டிருக்கிறது.

★

தெல்லிப்பளை உ. அ. அதிபர் பிரிவு பயிலுனர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை காலை 9. 30 மணிக்கு அருணோதயாக் கல்லூரியில் நடைபெறும். (ஒ-3)

## உணவுப் பொருள் வரும்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பும் விடயம் குறித்துப் பேசிவருகிறார். நிலைமை மாறுவதாக இல்லை.

கப்பல் மூலமாக உணவுப் பொருள்களை அனுப்ப முடியாது எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, தரை மார்க்கமாக வவுனியாவுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதாக கொழும்பு அதிகாரிகள் கடந்த மூன்று நான்கு நாட்களாகக் கூறி வருகிறார்கள்.

கடந்த 17 ஆம் திகதி கொழும்புக்கு யாழ் உணவுத் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அறிக்கையில்,மா கையிருப்பு இல்லை என்றும், அரிசி 1,600 தொன் மட்டுமே கையிருப்பில் இருக்கின்றது என்றும் கொழும்புக்குத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

யாழ் மாவட்டத்தின் சராசரி சனத்தொகை எட்டு லட்சமாக இருந்ததால் 1,600 தொன் அரிசியும் இருவாரங்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். இன்று இரண்டு லட்சம் வெளி மாவட்ட அகதிகளுடன் 10 லட்சம் பேருக்கு உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அதனால் எதிர்பார்த்ததை விட குறைந்த நாட்களுக்கே போதுமானதாக இருந்தது என்று யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் விளக்கினார். (அ-3)

## வரதராஜ . . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சு வார்த்தைக்கு வரவில்லை.

விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தையை நடத்திக் கொண்டே எம்மை ஏமாற்ற முயன்றனர்.

எமது படைவீரர்கள் சமர் புரிவதில் சளைத்தவர்கள் அல்லர். இந்திய படையினருடன் முகம்கொடுக்க முடியாத காரணத்தால்தான் விடுதலைப் புலிகள் எம்முடன் பேச்சு வார்த்தைக்கு வந்தனர்.

முந்திய ஜனாதிபதியும் இன்றைய ஜனாதிபதியும் பல சந்தர்ப்பங்களையும் விடுதலைப் புலிகளுக்குப் பேச்சு வார்த்தைக்காக அமைத்துக்கொடுத்தனர். ஆயினும் அந்த வஞ்சகர்கள் எம்மை அலட்சியஞ் செய்து போர் தொடுத்தனர்.

இதனை நாம் முறியடிக்க வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புதிய மாகாணசபைத் தேர்தலை நடத்தி அங்கு வாழும் மக்களிடம் அதிகாரத்தைக் கையளிக்கவே இப்புதிய திருத்தச் சட்டமூலங்களைக் கொண்டுவந்துள்ளோம் - என்றார். [அ-எ]

## வவுனியாவில்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக்க வேண்டியவர்களும் நாம் தான்.

ஆகவே நகரரைக் கட்டி எழுப்ப சகலரும் முன்வர வேண்டும்—

அத்தியாவசிய சேவைகளான சுகாதாரம்,மின்சாரம், நகரசபை, செயலகப்பிரிவு, சமூகசேவை, உதவி அரச அதிபர் பிரிவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த 40 அதிகாரிகள் திங்கட்கிழமை அங்கு சென்று நிலைமைகளை அவதானித்து, ஆரம்பத்தில் நகரிலோ அல்லது நகருக்கு வெளியிலோ கடமையாற்றி [illegible] நிர்வாகத்தை ஏற்படுத்துவதே முடிவு [illegible] (இ-3)

## ஒரே நாளில்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஏழாயிரத்தையும் தாண்டி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் சண்டை ஆரம்பமான பின்னர் ஆகக் கூடுதலான அகதிகள் சென்ற வியாழன் அன்றே இராமேஸ்வரம் சென்றடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. [illegible]

## செய்திச் சாரம்

### இலங்கை நெருக்கடி பற்றி தேவிலால்

சென்னை, ஜூலை 7

ஸ்ரீரங்கத்தில் துணைப் பிரதமர் தேவிலால் செய்தியாளரிடம்பேசுகையில். இலங்கை நெருக்கடி பற்றியும் பிரஸ்தாபித்தார்.

அப்போது திரு. தேவிலால் சொன்னதாவது;

இலங்கையில் இடம் பெறும் சண்டை, அதன் உள்நாட்டு விவகாரம் ஆகும். இதில் இந்தியா தலையிடாது.

இப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும்.

என்னை இன்று சந்தித்த இலங்கைத் துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமியிடம் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவித்திருக்கின்றேன்.

இப்படி திரு- தேவிலால் தெரிவித்தார். (இ - எ)

### வயாவிளானில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நேற்று பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று வயாவிளான் சென்றிப் பகுதியில் விழுந்து வெடித்ததில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் உயிரிழந்தார்.

வீரமரணமடைந்த பிரதீபன் (கண்டி) என்ற இந்தப்போராளிக்கு விடுதலைப் புலிகள் வீர அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

### மிதிவெடிக்கு போராளி பலி

பச்சிலைப்பள்ளி ஜூலை 7

தவறுதலாக மிதிவெடியில் அகப்பட்ட போராளி ஒருவர் மரணமானார். இச்சம்பவம் ஆனையிறவில் இடம் பெற்றது. கண்டாவளையைச் சேர்ந்த திலீப் என்பவரே மரணமானவர். (இ-117)

### கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

வெளி மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்கு நிவாரணப் பொருள்களைச் சேகரிக்க யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய ''இன்ரறக்ட்'' உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களின் உதவி பெறப்பட உள்ளது.

அதன் நிமித்தம், கல்லூரியின் ''இன்ரறக்ட்'' உறுப்பினர்களையும், மாணவர்களையும் இன்று சனிக்கிழமை காலை கல்லூரிக்குச் சமுகமளித்து அதிபரைச் சந்திக்குமாறு யாழ். ரோட்டரிக்கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

### அத்தாய் சம்பவத்தில் சிறுவன் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 7

நேற்று முன்தினம் மாலையில் பலாலியிலிருந்து ஏவப்பட்டதாகக் கூறப்படும் ஷெல் குண்டுகள் அல்வாய் அத்தாய்ப்பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒன்பது வயதுச் சிறுவன்ஒருவன் பலியானான். ஆறு பேர் படுகாயமுற்றனர்.

இந்தச்சம்பவத்தில் ஏழு பேர் படுகாயமுற்றதாகநேற்றைய உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-9)

### இரண்டே கால் லட்சம் அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நேற்று, யாழ். செயலகம் எடுத்த கணக்கெடுப்பின்படி யாழ். மாவட்டத்தில் 44, 652 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 25 ஆயிரம் அகதிகள் உள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 331 அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் வெளிமாவட்டங்களில் இருந்து அகதிகள் வந்தவண்ணமுள்ளனர் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## யாழ். பெரியாஸ்பத்திரி- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரியை பழைய இடத்தில் இயங்கச் செய்வதற்கான இணக்கநிலை ஒன்று உருவாகி தந்த போதிலும் நேற்றைய கூட்ட முடிவினால் அதற்கான சாத்தியம் இல்லாமல் போயுள்ளது.

இதற்கிடையில்--

யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும் யாழ் நகரில் இயங்க உதவும்படி கோரி வைத்தியசாலை நிர்வாகம் அனுப்பிய செய்திக்கு நேற்றுவரை சுகாதார அமைச்சு எந்தவித பதிலும் அளிக்கவில்லை.

மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கி வரும் இந்த வைத்தியசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச் செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி வகைசெய்யுமாறு இரு வாரங்களுக்கு முன்பு சுகாதார அமைச்சரிடம் வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது (அ-10-3)

## வாகனங்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது கருதப்படவேண்டும்.

வாகனத்தில் இருப்பவர்கள் அதில் இருந்து இறங்கி அருகில் நிற்கவேண்டும்.

பொது மக்களை விமான ஓட்டிகள் இனங்கண்டு கொள்ள இது உதவும்.

அப்பாவி மக்கள் பயணம் செய்யும் வாகனங்கள் மீது தற்செயலாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைத் தடுக்கவும் இது உதவும்.

இப்படி அரசு அறிவித்துள்ளது. (இ-எ)

## யாழ். உ. அ. அ. - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்த குடும்பங்களின் விவரமும் வருமாறு;

யாழ்ப்பாணம் - 9766, நல்லூர்-3400, தெல்லிப்பழை-6507, சண்டிலிப்பாய் - 3500, சங்கானை - 3794, உடுவில்-3600, கோப்பாய் - 1000, சாவகச்சேரி - 5350, கரவெட்டி - 1136, பருத்தித்துறை - 2029, மருதங்கேணி-1600, வேலணை - 1300, ஊர்காவற்றுறை - 2164 (இ-3)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், நாலாம் குறுக்குத்தெரு இலக்கம் 106 இல் இயங்கி வந்த அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தற்பொழுது மானிப்பாய் வீதி, உரும்பிராயில் யாழ். கல்லூரி விவசாயப் பண்ணைக்கு அருகாமையில் திரு. அ. நல்லதம்பி அவர்களின் இல்லத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

(C/4798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org